6. நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை குறித்த முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.* (குறுக்கீடு) நீங்கள் இதையெல்லாம் Zero hour-ல் raise *செய்ய* வேண்டும். (குறுக்கீடு) விதி *110-ன்கீழ் அறிக்கையும் முடிந்துவிட்டது.* இப்போது வேறு Agenda-விற்குள் *சென்றுவிட்டோம். திரு. செங்குட்டுவன் மற்றும் திரு. ரங்கநாதன் நீங்கள் இருவரும் உட்காருங்கள், நாளைக்குப் பார்க்கலாம்.* (குறுக்கீடு). *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாய்மையின் தவமாய், தமிழகத்தின் வரமாய், உரிமையின் முழக்கமாய், தமிழ் உணர்வின் பெருக்கமாய், சத்தியத்தின் நித்தியமாய், சமத்துவத்தின் சாட்சியமாய், பாசக் களஞ்சியமாய், பண்புப் பெட்டகமாய், தமிழகத்தை ஆட்சி செய்து இன்னும் ஆயிரம் ஆண்டுகளானாலும் மங்காத புகழுடன் மக்களின் இதய சிம்மாசனத்தில் வீற்றிருக்கும்* (மேசையைத் தட்டும் ஒலி) *மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இணையதளத்தின் வாயிலாக மணல் விற்பனை, நீரா பானம், குடி மராமத்துப் பணிகள் என பல்வேறு ஆக்கப்பூர்வமான திட்டங்களைத் தந்து சிறப்பாக மக்கள் பணியாற்றி வருகின்றார்கள்.*

பிற்பகல் 11-50

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைகளின் மானியக் கோரிக்கையின்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டு, அற்புதமான 66 அறிவிப்புகளை வெளியிட்டோம். இன்று பேரவை விதி 110-ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த 11 முக்கியமான அறிவிப்புகளையும் சேர்த்து இந்த ஆண்டு மொத்தம் 77 அறிவிப்புகள் எங்கள் துறையின் சார்பாக மக்களுக்காக வெளியிடப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வகுத்துத் தந்த நெறிமுறைகளின்படி, வழங்கிய அறிவுரைகளின்படி, சற்றும் திசை மாறாமல் மாண்புமிகு

[திரு. எஸ்.பி. வேலுமணி] [2017 ஜூலை 3

அம்மா அவர்களினுடைய ஆட்சியை தலைமையேற்று வழி நடத்திக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக மக்களின் நலனைக் கருத்தில்கொண்டு இன்று 3,500 கிலோ மீட்டர் ஊரகச் சாலைகள் மேம்பாடு, 25 உயர்மட்டப் பாலங்கள், ஆயிரம் ஊராட்சிகளுக்கான கூட்டமைப்புக் கட்டடங்கள், 26 இலட்சத்து 49 ஆயிரம் தனி நபர் இல்லக் கழிப்பறைகள், திடக் கழிவு மேலாண்மைத் திட்டத்தை மேம்படுத்த மூன்று சக்கர மிதிவண்டிகள்/தள்ளு வண்டிகள் மற்றும் மின்கலம்மூலம் இயக்கப்படும் தள்ளு வண்டிகள், வேலூர், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டம், அடையாறு நதியின் தொடக்கம் முதல் முகத்துவாரம் வரை உள்ள 42 கிலோ மீட்டர் தூரத்தைச் சீரமைத்தல் ஆகியவற்றிற்கான அற்புதமான திட்டங்களை 15,324 கோடி ரூபாய் செலவில் அறிவித்திருக்கின்றார்கள். அந்தத் திட்டங்களையெல்லாம் இன்றைக்கு வேலூர், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி திருநெல்வேலி போன்ற மாநகராட்சிகளுக்கும் வழங்கியிருக்கிறார்கள். எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இங்கு இல்லை. பல எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வைத்த கோரிக்கைகளையும் இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றியுள்ளார்கள். ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்ற பேதம் பாராமல், எவ்வாறு மாண்புமிகு அம்மா அவர்கள் திட்டங்களைத் தந்தார்களோ, அந்த அடிப்படையில், இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அற்புதமான திட்டங்களைக் கொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இவற்றுள் பார்த்தீர்களென்றால், 800 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில், மாண்புமிகு அம்மா அவர்கள் சிறப்பு சாலைத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவற்றையும் இன்றைக்கு அறிவித்திருக்கிறார்கள்.

இன்றைக்கு கிராமங்களெல்லாம், நகராட்சிகள், மாநகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் போன்று அற்புதமான சாலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்றால், அதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் காரணம். அந்த வழியில் இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில் 45,000 புதிய சாலைகள் ஊராட்சிகளில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. அது, இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத சரித்திர சாதனை.

2017 ஜூலை 3]   **[திரு. எஸ்.பி. வேலுமணி]**

அந்தவகையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு அறிவித்திருக்கிறார்கள். அதேபோல், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விதி 110-ன்கீழ் ஐந்து வருடங்களாக/ ஆறு வருடங்களாக, தொடர்ந்து 32,848 கோடி ரூபாய் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்பை அறிவித்தார்கள். அதிலும் இந்தியாவிலேயே முதலில் இருப்பது தமிழ்நாடு. மாண்புமிகு அம்மா அவர்களது அரசின் வழியில் இன்றைக்கு சிறப்பாகச் செயல்படக்கூடிய அரசாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அரசு செயல்படுகிறது என்பதற்கு இது ஒன்றே உதாரணம். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த வருடத்திற்கு மட்டும், விதி 110-ன்கீழ் 7,000 கோடி ரூபாய் வங்கிக் கடன் வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் 4,000 கோடி ரூபாய் முதல் மூன்று வருடங்களிலும், 6,000 கோடி ரூபாய் அடுத்த மூன்று வருடங்களிலும் என அறிவித்தார்கள். இன்றைக்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 7,000 கோடி ரூபாய் என்று அறிவித்திருக்கிறார்கள். இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்களின் கனவுத் திட்டங்களையெல்லாம் அதிகமாகச் செயல்படுத்தக்கூடிய அரசு, இன்றைய அம்மா அவர்களது அரசு என்பதற்கு இதை உதாரணமாகச் சொல்லிக்கொள்கிறேன். எங்களது நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை சார்பாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இத்தனை திட்டங்களையும் அறிவித்ததற்கு எங்களது துறையின் சார்பாக நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

7. மானியக் கோரிக்கைகள், 2017–2018, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 26–வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

(ஆ) கோரிக்கை எண் 31–தகவல் தொழில்நுட்பவியல் துறை

(அ) கோரிக்கை எண் 26–வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2017-2018 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும், வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 26-வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற